**த. நா.ச.பே. எண் :011** **நாள் : 12.08.2016**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110**–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 12.8.2016

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதன்மை துறை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, சேவைத் துறை வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பான விரைவான பயணம் ஆகியவற்றிற்கு அடித்தளமாக விளங்குவது சாலை உட்கட்டமைப்பு வசதிகள் தான்.

கடந்த 5 ஆண்டுகளில் 25,392 கோடி ரூபாய் செலவில் 48,372 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டதுடன், 2,095 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. 13 புறவழிச் சாலைகள் 211.44 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 11,367 கோடி ரூபாய் செலவிலான பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கீழ்க்காணும் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. நபார்டு கடனுதவி பெற்று 80 பாலங்கள் 159 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும். திருவள்ளூர் மாவட்டத்தில் 1 பாலம், கடலூர் மாவட்டத்தில் 2 பாலங்கள், வேலூார் மாவட்டத்தில் 1 பாலம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 1 பாலம், சேலம் மாவட்டத்தில் 5 பாலங்கள், நாமக்கல் மாவட்டத்தில் 3 பாலங்கள், தருமபுரி மாவட்டத்தில், 3 பாலங்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3 பாலங்கள், ஈரோடு மாவட்டத்தில் 4 பாலங்கள், திருப்பூர் மாவட்டத்தில் 3 பாலங்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3 பாலங்கள், உதகை மாவட்டத்தில் 1 பாலம், திருச்சி மாவட்டத்தில் 2 பாலங்கள், பெரம்பலூர் மாவட்டத்தில் 2 பாலங்கள், அரியலூர் மாவட்டத்தில் 2 பாலங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 8 பாலங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 பாலங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 4 பாலங்கள், திருவாரூர் மாவட்டத்தில் 2 பாலங்கள், மதுரை மாவட்டத்தில் 3 பாலங்கள், திண்டுக்கல் மாவட்டத்தில் 4 பாலங்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் 8 பாலங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில், 3 பாலங்கள், சிவகங்கை மாவட்டத்தில் 4 பாலங்கள், விருதுநகர் மாவட்டத்தில் 3 பாலங்கள் என இந்த 80 பாலங்கள் கட்டப்படும். இந்த பாலங்கள் கட்டப்படுவதன் காரணமாக சுமார் 472 கிராமங்களில் வசிக்கும் 22 லட்சம் மக்கள் பயனடைவார்கள். இந்தப் பாலப் பணிகளில் பெரும்பாலானவை கிராமப் புறங்களில் அமைய உள்ளதால் விவசாயிகள் விவசாய பொருட்களை எளிதில் சந்தைப்படுத்துவதற்கும் இது பயனுள்ளதாக அமையும்.

2. ஒசூர் நகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ஜுஜுவாடி முதல், பேரண்டப்பள்ளி வரை 18.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு வெளிவட்ட சாலை அமைக்கப்படும்.

இப்பணிக்காக கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தாலுக்காவில் ஜுஜுவாடி, அனுமப்பள்ளி அக்ரஹாரம், பேகேப்பள்ளி, நல்லூர், எலுவப்பள்ளி, ஆவலப்பள்ளி, கெலவரப்பள்ளி, சின்னகொள்ளு, பெத்தகொள்ளு, மோரனப்பள்ளி மற்றும் ஆலூர் ஆகிய **11** கிராமங்களில் **60.16** ஹெக்டேர் அளவுக்கு நில எடுப்பு செய்யப்பட வேண்டும். நில எடுப்புப் பணிகள் **215** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

இந்த வெளிவட்ட சாலை திட்டத்தினால் ஒசூர் நகரில் போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறையும்.

**3.** சென்னை மாநகரின் முக்கிய நகர்ப்புற சாலைகளான தேசிய நெடுஞ்சாலை–**45**, தேசிய நெடுஞ்சாலை–**4**, தேசிய நெடுஞ்சாலை–**5** மற்றும் தேசிய நெடுஞ்சாலை–**205** ஆகிய சாலைகள் பல்வழிச் சாலைகளாக அகலப்படுத்தப்பட்டு பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சென்னை பெருநகர எல்லைக்குள் சாலை கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் சென்னை புறவழிச்சாலை, சென்னை வெளிவட்ட சாலை திட்டங்கள் செயலாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மேலும், அனைத்து தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் சென்னை துறைமுகப் பகுதிகளை இணைக்கும் பொருட்டு "சென்னை பெரிய வட்ட சாலை" அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆராயப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரின் சுற்றுப்புறத்தில் உள்ள முக்கிய இணைப்பு சாலைகள் மேம்படுத்தப்படும். செங்கற்பட்டு – திருப்போரூர் சாலை, தாம்பரம் – முடிச்சூர் – திருப்பெரும்புதூர் சாலை, கோடம்பாக்கம் – திருப்பெரும்புதூர் சாலை, வாலாஜாபாத் – சுங்குவார் சத்திரம் – கீழச்சேரி சாலை, சட்ராஸ் – செங்கல்பட்டு– காஞ்சிபுரம் – திருத்தணி சாலை, சிங்கபெருமாள் கோவில் – திருப்பெரும்புதூர் – திருவள்ளூர் – ரெட் ஹில்ஸ் சாலை, திருமழிசை– ஊத்துக்கோட்டை ஆகிய சாலைகள் தற்போதைய இரு வழித் தடத்திலிருந்து நான்கு வழித் தடச் சாலைகளாகவும், பல்லாவரம்– துரைப்பாக்கம் சாலை, சென்னை– சித்தூர்–பெங்களூரு சாலை ஆகியவை நான்கு வழித் தடத்திலிருந்து ஆறு வழித் தடச் சாலைகளாகவும் விரிவாக்கம் செய்யப்படும். **141.60** கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த சாலைகள் **744** கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவுப்படுத்தி மேம்படுத்தப்படும்.

இவ்விணைப்புச் சாலைகள் விரிவாக்கத்தினால் இச்சாலைகள் சென்னை மாநகரின் வெளி வட்டச் சுற்றுச்சாலை, பெரிய வட்டச் சாலை ஆகியவற்றிற்கு இணைப்புச் சாலைகளாக திகழும். அதனால் சென்னை புறநகர் பகுதிகளில் பெருமளவு போக்குவரத்து நெரிசல் குறையும்.

**4.** தாரமங்கலம் நகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ஓமலூர் – சங்ககிரி – திருச்செங்கோடு – பரமத்தி சாலை கிலோ மீட்டர் **9/240** முதல் கிலோ மீட்டர் **12/300** வரையான பகுதியில் **3.110** கிலோ மீட்டர் நீளத்திற்கு **20** கோடி ரூபாய் மதிப்பீட்டில் புறவழிச் சாலை அமைக்கப்படும்.

இந்த புறவழிச் சாலை திட்டம் தாரமங்கலம் நகரில் போக்குவரத்து நெரிசலை வெகுவாக குறைக்கும்.

**5.** தேசிய நெடுஞ்சாலை **79**-ல் மல்லியக்கரை – ராசிபுரம் திருச்செங்கோடு **–** ஈரோடு சாலையில் கிலோ மீட்டர் **41/0–43/0**ல் ராசிபுரம் நகரம் அமைந்துள்ளது. ராசிபுரம் நகரப் பகுதியில் இச்சாலை மிகவும் குறுகலாக இருப்பதாலும், ராசிபுரம் நகரின் சுற்று வட்டாரங்களில் உள்ள கல்வி நிலையங்களின் பேருந்துகள் காலை, மாலை இரு வேளைகளிலும் இச்சாலையின் வழியாக செல்ல வேண்டியிருப்பதாலும் போக்குவரத்து மிகவும் நெரிசல் மிக்கதாக உள்ளது. எனவே, ராசிபுரம் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டத்தில் கிலோ மீட்டர் **2/8** முதல் **8/8** வரை **6** கிலோ மீட்டர் நீளத்திற்கு மோகனூர் **–** நாமக்கல் – சேந்தமங்கலம் **–** ராசிபுரம் சாலை அப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் ஆரம்பித்து அணைப்பாளையம் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையுடன் National Highway **44–**உடன் கிலோ மீட்டர் **230/2**ல் இணையுமாறு அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

அணைப்பாளையம் கிராமத்திலிருந்து மல்லியகரை – ராசிபுரம் **–** திருச்செங்கோடு **–** ஈரோடு சாலை பொன்குறிச்சி என்னும் இடத்தில் இணையுமாறு தற்போது இரண்டாம் பகுதி அமைக்கப்படும். சுமார் **25** கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த சாலை அமைக்கப்படும்.

இதனால் ஆத்தூர், மெட்டாலா, முள்ளுக்குறிச்சி, கொல்லிமலை, சேந்தமங்கலம் ஆகிய பகுதிகளில் இருந்து சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, ஈரோடு செல்லும் வாகனங்கள் இப்புறவழிச்சாலையின் வழியாக செல்ல இயலும். மேலும், ராசிபுரம் நகரை சுற்றியுள்ள கல்வி நிறுவனங்களின் வாகனங்கள் இப்புறவழிச்சாலை வழியாக செல்ல முடியும். அதன் காரணமாக ராசிபுரம் நகரில் போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறைவதுடன் பயண நேரம், எரிபொருள் செலவு, விபத்துகளின் எண்ணிக்கை போன்றவையும் குறையும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக சாலை போக்குவரத்து மேம்பாடு அடையும். சென்னை புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**